# ஸ்ரீ வைஷ்ணவம்
## [ஸித்தாந்தமும் ஸம்ப்ரதாயமும்.]

○

மன்மத ஸு மார்கழி மீ 16வ

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கத்தின்

ஆதரவில் நடைபெற்ற

ஸ்ரீ வைஷ்ணவ மஹாநாட்டைத்

திறந்து வைக்குங்கால்

அட்வகேட் D. ராமஸ்வாமி ஐயங்கார்

செய்த சொற்பொழிவின் ஸாரம்.

○

31—12—1955

# ஸ்ரீ வைஷ்ணவம்

## [ஸித்தாந்தமும் ஸம்ப்ரதாயமும்.]

○

மன்மத ஸூ மார்கழி மீ 16உ (31—12—1955)

**சென்னை ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கத்தின்**

ஆதரவில் நடைபெற்ற

**ஸ்ரீ வைஷ்ணவ மஹாநாட்டைத்**

திறந்து வைக்குங்கால்

அட்வகேட் D. **ராமஸ்வாமி ஐயங்கார்**

செய்த சொற்பொழிவின் ஸாரம்.

○

ஸ்ரீநிவாஸ க்ருபாநேத்ராம் ராமாநுஜஸமத்யமாம் |
அஸ்மத்தேசிக பாதாப்ஜாம் வந்தே குருபரம்பராம் ||

"ஆதியந்தமனந்த மற்புதமான வானவர் தம்பிரான்
பாதமலர் சூடும் பத்தியிலாத பாவிகளுய்ந்திட
நீதில் நன்னெறி காட்டி யெங்கும் திரிந்தரங்கனெம்மானுக்கே
காதல் செய்தொண்டர்க்கெப்பிறப்பிலும் காதல் செய்யும் என் நெஞ்சமே

(பெருமாள் திருமொழி 2-6)

உயர்வற உயர்நலம் **உடையவன்** யவனவன்
மயர்வற மதிநலம் **அருளினன்** யவனவன்
அயர்வறும் அமரர்கள் **அதிபதி** யவனவன்
துயரறு சுடரடி **தொழுதெழு** என்மனனே.

*(திருவாய்மொழி: 1—1—1)*

**திருமாலாகிய ஸ்ரீமந்நாராயணனே பரதெய்வம், அவனடிக்கு அன்பு பூண்டு செய்யும் தொண்டே நாம் பெறவேண்டிய பேறு, அப்பேற்றை யடைவதற்கு அவனருளொன்றே உபாயம் அல்லது வழி, என்ற கொள்கையை யுடையாரே ஸ்ரீ வைஷ்ணவர்கள். நாராயணனுடைய பெருமையை ஒப்புக்கொண்டு அவனாலே முக்தி**

பெறவேண்டும் என்று எண்ணுவோரனைவரும் வைஷ்ணவர்களே. அவர்கள் அத்வைதிகளாகவும் இருக்கலாம், த்வைதிகளாகவும் இருக்கலாம், சைதன்ய மதத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம், சுத்தாத்வைத மதத்தைச்சார்ந்தவர்களாகவும் இருக்கலாம். அவர்களுக்கு ஸ்ரீ வைஷ்ணவர்கள் என்ற வியவஹாரம் இல்லை, நம்மாழ்வார், நாதமுனிகள், ஆளவந்தார், ஸ்ரீ பாஷ்யகாரர் ஆகிய ஆசார்ய சிரேஷ்டர்கள் ஸித்தாந்தித்துப் போந்த மதத்தை அவலம்பித்தவர்களாய், திருமாலே தத்வம், திருமாலே உபாயம், திருமாலே புருஷார்த்தம் என்று திடமாக அறிந்து நம்பி ஒழுகு மவர்களுக்கு மட்டும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் என்று பெயர்.

## I ஸித்தாந்தம்

உபய வேதாந்தம் :

வைணவர்கள் அனைவருக்கும் அநாதியான வடமொழி வேதம் பொது. ஆழ்வார்களால் அருளப்பட்ட தமிழ்மறை ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கே அஸாதாரணமாக ஏற்பட்ட அறிவுப் பொக்கிஷம், அன்புக்களஞ்சியம். இருமொழி மறைகளும் ஒரே பொருளைத்தான் காட்டுகின்றன என்று கொள்கையுடையோ ராகையால் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு உபய வேதாந்திகள் என்றும் பெயருண்டு. உபயவேதாந்தம் என்றதால் இரண்டு வேதாந்தங்கள் என்று பொருளில்லை. இரண்டு ரூபத்தில் காட்சி யளிக்கும் ஒரே வேதாந்தம். இரண்டாகிய ஒன்று. ஒன்றாகிய இரண்டு. வெவ்வேறு அபிப்பிராயங்களைக் கொள்ளாது ஏகாபிப் பிராயமான இரண்டு வடிவில் அறியப்பட்ட வேதாந்தமே உபய வேதாந்தம். ஒன்றையிட்டு ஒன்றுக்குப் பெருமை. அவ்வரு மறையின் பொருளாய்க் கொண்டாடப்படுகிறது தமிழ் வேதம். ஆழ்வார்கள் மகிழ்ந்து பாடும் செய்ய தமிழ் மாலைகளைத் தெளிய வோதிய பின்னரே தெளியாத மறை நிலங்களைத் தெளியவல்லோ மாகையால் அவ்வடமொழி வேதத்தின் பெருமை இத்தமிழ் வேதத்தின் கையிலடங்கியிருக்கிறது. இப்படி ஒன்றுக்கொன்று அதிசயத்தை விளைவித்து வருவதாக உணர்ந்து அவைகளை ஒன்றுபடுத்தி அனுபவிக்குமவர்கள் உபய வேதாந்திகள்.

**குரு பரம்பரை—எம்பெருமானுர் தர்சனம் :**

இம்முறைமை முதன் முதல் நமக்குத் தந்தருளிய பெருமை நாதமுனிகளது. அவர் கிறுவிய இந்த அழகிய உபய வேதாந்த ஸித்தாந்தத்தைத் தமது பிரபந்தங்களால் நன்கு போஷித்து வளர்த்த பெருமை அவர் திருப்பேரனுகிய ஆளவந்தாருடையது. அதை நன்கு காப்பாற்றி உலகத்தில் நிலைநாட்டிய பெருமை ஆசார்ய ஸார்வபௌமரான நம் உடையவருடையது. அவரருளிய ஸ்ரீபாஷ்யாதி கிரந்த ரத்தினங்களாலே உலகிலுள்ள அஜ்ஞானந்த காரத்தை அறவே அகற்றி இத்தீதில் நன்னெறி பிரதிஷ்டாபனம் செய்யப்பட்டது. "நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்—பஹுபிருபசிதம் யாமுநேய ப்ரபந்தை:— த்ராதம் ஸம்யக் யதீந்த்ரை:—இதம் அகில தம:கர்சநம் தர்சநம் ந:" என்று இந்த பரம்பரையை நமக்கு வேதாந்த தேசிகன் உணர்த்தினர். மணவாள மாமுனிகளும் இத்தரிசனத்தை எம்பெருமானுர் வளர்த்த செயலை உலகமறிகைக் காக "எம்பெருமானுர் தரிசனமென்றே இதற்கு நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார்" என்று அனுபவிக்கிருர். நம் தரிசனம் இவ்வளவு பெருமையை யுடையது. மேலும் இதற்குப் பிரதமப் பிரவர்த்தகர் பெருமாளே. பீதகவாடைப் பிரானுரே பிரமகுருவும் பிரதம குருவும். "கமப்யாத்யம் குரும் வந்தே கமலாக்ருஹ-மேதினம்" என்ற கணக்கில் முதல் ஆசார்ய ஸ்தானம் திருமாலுடையதே. எம்பெருமான் முதல் எம்பெருமானுர் வரையுள்ள ஆசார்யர்கள் நம்மனைவருக்கும் பொதுவான ஆசார்யர்களே.

**பிரமாணங்கள் :**

சாஸ்திரங்கள் முக்கியமாக நம்முடைய இந்திரியங்களுக்குக் கோசரமாகாத விஷயங்களை எடுத்துச் சொல்லவே ஏற்பட்டன. பிரமாணங்கள், பிரத்யக்ஷம் அனுமானம் சப்தம் என்று மூவகைப் பட்டிருக்கும். அவற்றில் ஏதாவது ஒன்றைக் கொண்டுதான் நாம் பல உண்மைகளை உலக நடவடிக்கையில் அறிகிருேம். ஆத்ம விஷயத்திலும் அவைகளே நமக்கு உதவவல்லன. அவைகளைக்

கொண்டுதான் பலபல ஸித்தாந்தங்களும் சமயங்களும் மதங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அநேகமாக நம் ஸித்தாந்தத்தைத் தவிர மற்றைச் சித்தாந்தங்கள் எல்லாம் இம்மூன்று பிரமாணங்களேயும் சேரக்கொண்டு பரதத்துவத்தை ஸ்தாபிப்பதில்லே. நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் ஒன்றுதான் அம்மூன்றையும் துல்யப் பிரமாணங்களாக ஒத்துக்கொண்டு அவற்றுள் ஒன்ருலும் கண்டிக்கப்படாத உண்மையே மேலான உண்மை என்று போதிக்கிறது. பிரத்யக்ஷப் பிரமாணத்தால் நாம் அறியும் விஷயங்களெல்லாம் முற்றிலும் உண்மையே. அனுமானமும் சப்தமும் (சாஸ்திரமும்) பிரத்யக்ஷத்தோடு ஒன்றுபட்டு உண்மையை உணர்விக்கின்றன என்பதே நமது கொள்கை. ஏனைய ஸித்தாந்தங்களில் இந்த ஒற்றுமையின் பெருமையைப் பார்க்கமுடியாது.

த்ருஷ்டேபஹ்நுத்யபாவாத் அநுமிதி விஷயே
லாகவஸ்யாநரோதாத்
சாஸ்த்ரேணவாவலேயே விஹதிவிரஹிதே
நாஸ்திகத்வ ப்ரஹாணாத்

என்று இந்தப் பெருமையைப் பெரியோர்கள் அனுபவிக்கிருர்கள்; பிரமாணங்களொன்ருலும் நமதுஸித்தாந்த உண்மைகள் பாதிக்கப்படுவதில்லே. அப்படியே எல்லாப் பிரமாணங்களும் துல்யப் பிரமாணங்களாக ஒப்புக்கொள்ளப்பட்டவையே.

**சாரீரக சாஸ்த்ரம்:**

வைதிக ஸித்தாந்தங்கள் பலவற்றுள் நம்ஸித்தாந்தத்திற்குப் பல ஏற்றங்கள் உண்டு. அவற்றுள் முக்கியமானது தெய்வத்துக்கும் உலகத்துக்கும் இடையே உள்ள ஸம்பந்தம். சித்து, அசித்து, ஈச்வரன் என்ற தத்துவங்கள் மூன்றென்றும், அவற்றுள் சித்தும் அசித்தும் ஈச்வரனுக்குச் சரீர ஸ்தானத்தில் இருப்பவையென்றும் அவற்றுக்கு ஈச்வரன் சரீரியாகிய ஆத்ம ஸ்தானத்தில் நிற்கிருனென்பதும் நமது முக்கிய கொள்கை, பிரதான பிரதிதந்திரம் என்று கொண்டாடப்படுவது. பிரகிருதி வேறு ஆத்மா வேறு என்கிற உணர்ச்சி சித், அசித் என்கிற இரண்டு தத்துவங்களின் லக்ஷணங்களை அறிவதால் ஏற்படுகிறது. நமது ஆத்மா

பிரகிருதியினின்று வேறுபட்டது என்று உணர்ந்தும் அது ஸ்வதந்திரமென்றும் அதுவே ஈச்வரனென்றும் ஏற்படக்கூடிய கலக்கங்களெல்லாம் ஜீவாத்மாக்கள் வேறு, பரமாத்மா வேறு என்று சரியானபடி அறிவதாலே கழியும். ஜீவாத்மா, பிரகிருதி என்கிற ஏனைய இரண்டு தத்வங்களுக்கும் ஈச்வரன் ஒருவனே நியந்தா என்று ஸித்தாந்தித்து வைத்து நம் ஆசார்யர்கள் பர தத்வத்தையும் அவர தத்வங்களையும் ஒன்றுபடுத்திக் காட்டு கிறார்கள். இவர்கள் ஒன்றுபடுத்தும் முறை வெகு அழகு. சேதநாசேதனங்களாலான உலகம் பொய் என்று பேசி அதை இல்லை செய்வதில்லை. சேதநாசேதனங்கள் வேறு, பிரம்மம் அல்லது ஈச்வரன் அவற்றோடு ஸம்பந்தப்படாத தனித்தத்துவம் என்று துவைதிகள் சொல்லும் கக்ஷிகளையும் ஒப்புக்கொள்வ தில்லை. ஈச்வரன் சரீரி, அவனது சரீரம் உலகம் என்ற முறையில் உலகத்தையும் இறைவனையும் ஒன்றுபடுத்திச் சேர்த்து ஒரு அத்துவைத (இரண்டற்ற) தத்துவமாக ஸ்தாபித்தார்கள் நம் பெரியோர்கள். சேதநாசேதன விசிஷ்டப்பிரம்மம்தான் தத்துவம் என்று ஸ்தாபித்து வைத்த இவர்களது ஸித்தாந்தத்துக்கு விசிஷ்டாத்வைதம் என்று பெயர் ஏற்பட்டது. சுருதிகளில் பர ப்ரும்மத்தைக் குறிக்கும் எல்லா வாக்கியங்களையும் துல்யப் பிரமாணங்களாக அங்கீகரித்து "வேதைச்ச ஸர்வை: அஹமேவ வேத்ய:" என்று சொன்ன ஸர்வேச்வரனது வாக்கை மெய்ப்படுத் தியவர்கள் இவர்களே. மற்றவர்களெல்லாம் பேதச்ருதி யையோ, அபேதச்ருதியையோ அப்ரமாணம் என்று நிராகரித்தே தமது ஸித்தாந்தங்களை நிறுவினார்கள். பேதச்ருதிகளையும் அபேதச்ருதிகளையும் கடக ச்ருதியின் உதவியைக்கொண்டு இணைத்து வைத்த பெருமை நம் ஆசார்யர்களையே சேர்ந்தது. சுருதியானது கண்டபடி பேசுகிறதென்று பிறர் அதன்மேல் சுமத் திய பழி அகன்று ஒருமிடறாகவே அது தன் அபிப்பிராயத்தை வெளியிட்டது என்று அதன் பெருமை உலகத்துக்கு வெளிப் பட்டது. இப்படிப் பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்களையும் ஒருமுக மாக்கி, சுருதி வாக்கியங்களனைத்தையும் ஏகாபிப்பிராயமாக்கி வைத்தபடியால்தான் "இதி ஸர்வம் ஸமஞ்ஜஸம்" என்று பகவத் பாஷ்யகாரர் பலமுறை பேசி மகிழ்கிறார்.

### பரமபுருஷன் :

ஸர்வசரீரியான ஸர்வேச்வரனுக்குக் கல்யாணகுணாகரத்வம், ஹேயப்ரத்யநீகத்வம் என்ற உபயலிங்கமும் உண்டு என்பதும் நம் ஸித்தாந்தத்தில்மட்டும் காணக்கூடிய அழகு. "உயர்வறவுயர் நல முடையவன்" என்று அவனைத் திரமிடோபநிஷத்தாகிய திருவாய் மொழி முந்துற முன்னம்பேசி மகிழ்கிறது. நாமம், ரூபம், குணம் ஒன்றுமில்லாத பரப்ரம்மம் இப்போது ஜகன்மோஹனமான வடி வழகும் அதிமேன்மையான குணங்களும் பொருந்திய ஒரு பரம புருஷனாகக் காட்சியளிக்கிறது. அடியார்கள் உள்ளத்தை அழ காலும் அன்பாலும் அப்பரமபுருஷன் வசீகரித்து அவர்களை இன்புறச் செய்கிறான். ஆத்ம சிந்தனை (metaphysics) சாஸ்திரத் தோடு அழகுக்கலைக்குரிய (aesthetics) சாஸ்திரமும் தர்மானுஷ் டானத்துக்குரிய (Ethics) சாஸ்திரமும் இணைக்கப்பட்டன. அதற் குச் சேர ஈங்குடலம் விட்டெழுந்து நலமந்தமில்லதோர் நன்னாடு சேர்ந்து மோக்ஷானந்தம் அனுபவிப்பதோடு சமமாக அவன் போங் கேய் புகழ்கள் வாயவாய்ப புலன்கொள் வடிவு மனத்ததாய் அங்கேய் மலர்கள் கையவாய்" இங்கே செய்யும் வழிபாடு கருதப் பட்டு "அம்ருத இஹபவதி" என்று ஓதிய சுருதிப்பொருள் மெய்ப் பிக்கப்பட்டது. நித்யவிபூதியாகிற பரமபதத்துக்கும் லீலாவிபூதி யாகிய இந்த ஸம்ஸார மண்டலத்துக்கும் இடையே இருந்த சுவர் இடித்து வீழ்த்தப்பட்டு அனைவரும் இம்மையிலேயே மெய்யருள் பெற்று மேல்வாழ்வு வாழத் தகுதியுளளவர்கள் என்று நிரூபிக்கப் பட்டது.

### பக்திரூபாபன்ன ஞானம் :

இதுவரை சொல்லப்பட்ட அம்சங்களால் சாஸ்திர பரிசயத் தால் ஏற்படும் ஞானமானது அனுபவத்தால் கனிந்து பழுத்து உயர்ந்த பக்தியெனனும் வடிவில் விளங்குவதுதான முக்கியமான விஷயம் என்பது தெளிவாகத் தெரியும். இதைத்தான "மதி நலம்" என்று ஆழ்வாரும், "சேமுஷீ பக்திரூபா" என்று எம் பெருமானாரும் "ஞானம் கனிந்த நலம" என்று திருவரங்கததமுத

ருரும் பாராட்டுகிருர்கள். இந்த நிலைமை எய்துவதுதான் நாம் அனைவரும் விரும்ப வேண்டிய விஷயம். கேவல அறிவு பிரிக்கும். அறிவு கனிந்த அன்புதான் இணைக்கும். பரந்தாமனோடு நம்மனை வரையும் இணைக்கும் என்பதுமட்டுமல்ல. நம்மில் ஒருவரை மற்றவரோடு இணைக்கும். சமூகம் ஒன்றுபடும். 'யாவராய் நிற்கின்றதெல்லாம் நெடுமால்'' என்ற உணர்ச்சியால் நமக்குள் பரஸ்பர அன்பும் ஒற்றுமையும் விருத்தியாகும். ஸர்வசரீரியான ச்ரிய:பதியின் உடலின் பல கூறுகள் நாம் என்ற அறிவால் ஒருவர் அடையும் துன்பஇன்பங்களெல்லாம் ஏனையவரனைவருக்கும் துன்ப இன்பங்களாக ஏற்பட்டு அவ்வண்ணமே அனுபவிக்கப்படுதல் நியாயமாகும். நம்முன்னர் ஒரு மனிதன் விழுந்து காயமடைந்தால் அதைக் காணும் நாம் ஒவ்வொருவரும் நாமே விழுந்து காயமடைந் தோம் என்று எண்ணவேண்டி வருமேயன்றி ''யாரோ அடிபட்டான்; நமக்கென்ன'' என்ற எண்ணம் எழாது, எழலாகாது. விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் நமக்குச் செய்துகொடுக்கும் மன மாற்றம் இது. உலக மக்களனைவரும் இந்த மனோநிலையை எய்தினு லன்றி உலகத்தில் சண்டைகளும சச்சரவுகளும விருததியாகிக் கொண்டே யிருக்கும் என்று உணர்ந்தே நம பூர்வர்களாகிய பெரு மக்கள் இவ்வளவு சீரிய ஸிததாந்தத்தை உலகுக்குத் தந்து போனுர்கள்.

## ஸம்பிரதாயம்

### பரமைகாந்திகள்

இதையொட்டி ஏற்பட்ட ஸம்பிரதாயமும் வெகு விலக்ஷண மாகவும் உலகுக்கு உபயோககரமாகவும விளங்குகிறது. ஸநாதன தர்மத்துக்கே முக்கியமாக அனனிய மதங்களை வெறுக்காமல் அவை ஒவ்வொனறிலும ஒவ்வோருண்மை இருக்கிறது என்று பாவிபபது இயற்கை. ஸ்ரீ வைஷ்ணவ சமபிரதாயத்திலே இது வெகு முக்யமான அம்சம். ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்துச்குக் குலபதியாய் விளங்கும் நம்மாழ்வாருடைய உபதேசமும அநுஷ்டானமும் இவ்விஷயத்தில நனகு கவனிக்கபபடவேணடும்.

"வணங்கும் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபலவாக்கி அவையவைதோ
றணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்தி பரப்பிவைத்தாய்
இணங்குநின்னோரையில்லாய், நின்கண் வேட்கை எழுவிப்பனே."

எம்மதமும் சம்மதம் என்ற நிலை கார்யகர்மாகாது. ஆனால் எம் மதத்திலும் விளங்குமவன் ஸ்ரீமன் நாராயணனே என்று அனுபவிப்பது மிகவும உயர்ந்தது. ஏனெனில் பிற மதங்களினிடத்தும் அம்மதங்களைப் பின்பற்றுபவர்களிடத்தும் துவேஷ புத்தி ஏற்படுவதற்கு ஏதுவில்லை. நம்மாழ்வாருடைய பகவதனுபவத்தில் இதர தைவங்களனைத்துக்கும் இடமுண்டு. "கருவுடைத் தேவில்களெல்லாம் கடல் வண்ணன் கோயிலே யென்னும்" என்கிற அனுஸந்தானமும் "நும்மின் கவிகொண்டு நும்நுமிட்டா தெய்வம் ஏத்தினால் செம்மின் சுடர்முடி என் திருமாலுக்குச் சேருமே" என்கிற அனுஸந்தானமுமே இதற்குப் போதிய சான்றுகள். இதர மதஸ்தர்களிடத்தில் துவேஷம் பாராட்டாமைக்காக இவ்வளவு வேண்டுமென்றாலும், ஒவ்வொருவரும் தன்னளவில் பரதேவதா நிஷ்கர்ஷத்திலே ஐயம் சிறிதும் கலசாமல் "ஸ்ரீமாந் நாராயணோ ந: பதி: அகிலதநு: முக்திதோ முக்தி போக்ய:" என்கிற நிலையில் தெளிவான ஞானம் பெறவேண்டும் என்பது "ஒன்றும் தேவும்" திருவாய்மொழியில் நன்கு பேசப்படுகிறது. இந்த நிஷ்கர்ஷத்தினால் நமக்கு ஏற்படும் மனோநிலையைப் பிறர் உணராமல், வைஷ்ணவர்கள் எல்லாம மிகுந்த குறுகிய மனப்பான்மையுடையவர்கள் என்று பழிகூறுகிறார்கள். அது வீண் அபவாதம் என்பது உண்மையாயினும நாம் அன்னிய மதத்தினர்களோடு கலந்து பரிமாறும்போது ஆழ்வார் காட்டியருளிய உயர்ந்த நிலையை அவலம்பித்த நம் மனதில் விசால நோக்கம்மட்டுமே குடிகொண்டிருக்கிறதென்பதையும், பாதிவ்ருத்யத்தின பெருமையால் பர புருஷனைக் கண்ணெடுத்தும் பாராத காரிகையின தர்மத்தைப பின்பற்றுவதாலே அதை இழிவு படுத்திக் கூற எவருக்கும் அதிகாரமில்லை என்பதையும் அறிவுறுத்தவேண்டும். நம் சம்பிரதாயத்தில் பரமைகாந்திகள் என்று கொண்டாடப்படுமவர்கள் பரமபுருஷன் திறத்துப் பாதிவ்ருதய தர்மத்தை யவலம்பித்

தவர்கள். எம்பெருமான் ஒருவன்தான் தெய்வம் என்று உணர்ந்து, "உன்னல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்" என்று இருப்பவர்கள் ஏகாந்திகள். அவர்கள் நான்கு வகைப் படுவர் என்று பெருமாளே கீதையில் அருளிச் செய்கிறார், ஆர்த்தன், அர்த்தார்த்தி, ஜிஜ்ஞாஸு, ஞானி என்று. இவர்கள் நால்வரும் எம்பெருமானை உபாஸித்து முறையே துக்கநிவ்ருத்தியையோ ஐச்வர்ய ப்ராப்தியையோ, ஞான லாபத்தையோ அல்லது அவ்வெம்பெருமானையேயோ அடைகிறார்கள். இவர்களுள் முதல்மூவர் ஏகாந்திகள். ஞானி என்று பேசப்பட்ட நான்காவது அதிகாரிதான் பரமைகாந்தி. பகவல்லாபமே புருஷார்த்தம், பகவத் க்ருபையே அதற்கு உபாயம் என்று அறிந்து அனுஷ்டிக்குமவர்கள் தாம் ஞானிகள். இவர்களுக்குத்தான் நம் சம்பிரதாயத்தில் முதல் ஸ்தானம் அளிக்கப்பட்டிருக்கிறது.

**திவ்ய தாம்பத்யம் :**

"ஸ்ரீ வைஷ்ணவம்" என்ற இந்த ஸம்பரதாயத்துக்கு ஸ்ரீ விசிஷ்டனான நாராயணனே தத்வமும், ஹிதமும், புருஷார்த்தமும். உபாயவேளையோடு போக வேளையோடு வாசியற ஒருமிதுனமே நமக்கு உத்தேச்யம். "என் திருமகள் சேர்மார்வனே என்னும் என்னுடை ஆவியே" என்றதால் தத்துவம் ஒரு மிதுனம் என்பதுவும், "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக் கண்ட சதிர் கண்டொழிந்தேன் அடைந்தேன் உன் திருவடியே' என்றதால் உபாயம ஒருமிதுனமென்பதுவும் 'கோலத்திருமாமகளோடுன்னைக் கூடாதே" என்றதால் புருஷார்த்தம் ஒரு மிதுனம் என்பதுவும் வெகு அழகாக ஆழ்வாராலே காட்டப்பட்டுள்ள விஷயம். இப்படிப் பாடிப் போந்த ஆழ்வாருக்குத் 'திருமாலால் அருளப்பட்ட சடகோபன்" என்ற பிருதம் விளங்குவதில் வியப்பேது? உபநிடதங்கள் "புருஷ ஸூக்தம்" "ஸ்ரீ ஸூக்தம" என்று தனித்தனி ஸூக்தங்களாலே பேசி வைத்தவிடத்து இந்த த்ரமிடோபநிஷத் ஒன்றுமே அவர்களை ஒரு மிதுனமாகச் சேர்த்து அனுபவித்துப் பேசுகிறது, சாஸ்திரங்களில் பெருமாளைப் பிரதிபாதிக்குமிடங்களெல்லாம் "ஸ்ரீ"யையும்

ப்ரதிபாதிக்கின்றன என்று நம் பூர்வாசாரியர்களுடைய ரஹஸ்யங்களில் அருளிச் செய்யப்பட்ட அர்த்த விசேஷம் ஆழ்வார்களது செய்ய தமிழ் மாலையைத் தெளிய வோதிய பிறகே நாம் தெளியக்கூடிய ஒருமறைநிலம். இதுகொண்டுதான "தந்தையென நின்ற தனித்திருமால் தாளில் தலைவைத்தோம் சடகோபனருளினாலே" என்று அனுஸந்திக்க நமக்கெல்லாம் ஒருவாய்ப்பு ஏற்பட்டது.

பிரபந்தி

ஆழ்வார் திருமாலின் பெருமையைக் காட்டிக்கொடுத்து தத்துவத்தை ஒருவிலக்ஷணமான முறையிலே நிறுவியதுபோல், ஹிதமும் புருஷார்த்தமும்கூட இவரால்பரிஷ்கரிக்கப்பட்டுவிளங்குகின்றன. "புகலொன்றில்லா அடியேன உன் அடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்பதுபோன்ற பல இன்பப் பாடல்களால் பகவத் சரணாரவிந்த சரணாகதியே இக்காலத்தவர் கையாளக்கூடிய உபாயம் என்பதை பிரதிஷ்டாபனம் செய்தருளினர். சரணாகதிகத்வத்தால் ஸ்ரீ பாஷ்யகாரர் அனுஷ்டித்துக் காட்டிய பிரபத்தி மார்க்கத்துக்கு ஆழ்வார் திருவாய்மொழியே மூலம் என்று சொல்லலாம். இது புதிய முறையல்ல. "முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே" யென்று உபநிஷத்துக்கள் உத்கோஷித்த முறைதான் இது. இருப்பினும் கர்மயோக, ஞானயோக, பக்தியோகங்கள் என்று கொண்டாடப்பட்ட உபாயங்களெல்லாம் உபாயங்களாகக் கருதக் கூடாத இக்காலத்தில் நமக்கெல்லாம் பயன்படக் கூடிய உபாயம் இது வொன்றே என்று காட்டிய பெருமை நம்பூருவர்களுடையதே. ஆழ்வாருக்குப் பிரபன்னஜன ஸந்தானகூடஸ்தர் என்று பெயர். அனுஷ்டான முறையில் சிற்சில பேதங்களிருப்பினும் ஸ்ரீ பாஷ்யகாரர் திருவடி ஸம்பந்தம் பெற்ற அனைவரும் பிரபன்னர்களே யென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்படவேண்டிய உண்மை,

## புருஷார்த்த காஷ்டை

புருஷார்த்த விஷயத்திலும் இப்படியே ஒரு அழகிய அம்சம் நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் காணப்படுகிறது. "உன்றன்னோடு உற்றோமேயாவோம் உனக்கே நாமாட் செய்வோம்'' என்று பகவத் ப்ராபதியும் பகவத் கைங்கர்யமுமே புருஷார்த்தம் என்று அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கச் செய்தேயும் அதனுடையசரம பர்வம் (புருஷார்த்தகாஷ்டை)பாகவத பரியந்தம்செல்லவேண்டும் என்ற ரஸமான அம்சம் காட்டப்படுகிறது. பாகவதர்கள் பெருமையையும், பாகவத ஸம்பந்தத்தின் பெருமையையும் விளக்கி வைக்கும் பல திருமொழிகளும், திருவாய்மொழிகளும் திவ்ய ப்ரபந்தங்களில் காணப்படுகின்றன. "தேட்டருந்திறல்'' என்கிற பெருமாள் திருமொழியும் 'கண்சோர'' என்கிற பெரிய திருமொழியும், "பயிலும் சுடரொளி'', "நெடுமாற்கடிமை'' என்கிற திருவாய்மொழிகளும் வெகு அழகான முறையில் பாகவதர்கள் பெருமையைப் பேசியிருப்பன. இருப்பினும் இந்த விஷயத்தில் "கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்ற மதுரகவியினுடைய பிரபந்தம் தலைசிறந்தது. அது ஒரு தனி வழியை ஏற்படுத்தி வைத்தது. இதை "அன்பர்க்கே அவதரிக்கும் மாயன் நிற்க அருமறைகள் தமிழ் செய்தான் தாளேகொண்டு துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும் தொல்வழி' யென்று வேதாந்த தேசிகன் பாராட்டுகிறார். சத்ருக்னாழ்வான படியிதுவென்று பெரியோர்கள் பேசிக் களிக்கிறார்கள். மதுரகவிக்குப் பிறகு இந்த ஸித்தாந்தத்தை நன்கு அவலம்பித்து தேனிலுமினிய தீங்கவிகளாலே பாடி வைத்தவர் திருவரங்கத்தமுதனார். அவருடைய திவ்யப் பிரபந்தமாகிய இராமாநுச நூற்றந்தாதிக்குப் பிரபன்ன காயத்ரியென்றே பெயர். அதையும் சேர்த்துத்தான் திவ்யப் பிரபந்தம் நாலாயிரமாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது நம் பெரியோர்களால். இந்தப் பெருமை நம் ஸம்ப்ரதாயத்துக்கு அஸாதாரணம். "பசுர்மநுஷ்ய: பக்ஷீவா யேசவைஷ்ணவ ஸ்ம்ச்ரயா:'' என்ற கணக்கில் பாகவத ஸம்பந்தம் பெற்று பாகவதனொருவன் பக்கல் ஒதுங்கி வர்த்தித்தலே ஒரு மோக்ஷோபாயம் என்று நிர்த்தாரணம் செய்து வைக்கப்பட்டிருக்கிறதென்றால் பாகவதர்கள் பெருமை பேசவும் ஒண்ணுமோ! நாம்

வாய்திறந்து எம்பெருமானை ஏதாவது ஒரு வரம் கேட்க வேண்டும் என்று ஏற்பட்டால் "வாய்க்கதமியேற்கு ஊழிதோறூழியூழி" என்றும் "சுத்தாநாம்து லபேமஹி ஸ்திரதியாம் சுத்தாந்த ஸித்தாந்திநாம்" —என்றும்தான் கேட்போமேயன்றி ஐச்வர்ய கைவல்யாதிகளையோ அல்லது ஸாக்ஷாத் மோக்ஷத்தையேயோ கேட்க மறுப்போம். அப்படிப் பழக்கி வைத்திருக்கிறார்கள் நம்மை நம் பெரியோர்கள்.

இப்படி அடிமுதல் நுனி வரையில் அழகாயுள்ள நம் ஸித்தாந்தத்தினுடையவும் ஸம்ப்ரதாயத்தினுடையவும் அருமை பெருமைகளை நாம் அனைவரும் நன்குணர்ந்து ஒன்றுபட்டு, பரஸ்பரஹிதைஷிகளாய் வாழ்ந்து, நம் உபதேசங்களாலும் அனுஷ்டானத்தாலும் உலகனைத்தையும் நல்வழியிலே நடத்தி வைத்து நல்வாழ்வு வாழச் செய்ய நமக்கு ஓர் கடமையுள்ளது என்று உணருவோமாக!

வாழி அருளாளர் வாழி அணி அத்திகிரி
வாழி எதிராசன் வாசகத்தோர்—வாழி
சரணாகதியென்னும் சார்வுடன் மற்றொன்றை
அரணாகக் கொள்ளாதா ரன்பு

6M,2J54,0
31438

ஜகன்மோகினி பிரஸ், திருவல்லிக்கேணி